ஓம் கணபதி துணை

# கிரஹப்பிரவேச முன்தயாரிப்பு

(அனைத்து பக்கங்களையும் அச்சிடவும்)

இந்த முன்னேற்பாடு விளக்கம் கிரஹப்பிரவேசம் மற்றும் கணபதி, லக்ஷ்மி, குபேர, நவக்கிரக, வாஸ்து வேள்வி(ஹோமங்)களுக்கும் பொதுவானது. கிரஹப்பிரவேசம் சம்பிரதாயப்படி, தர்மத்தின் அடிப்படையில் மிகவும் புனித தன்மையுடன் தரமாக அமைய வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தில் திட்டமிடல், ஒருங்கிணைப்பது மற்றும் செயல்படுவது குறித்து இங்கு விரிவாக தரப்பட்டுள்ளது. முழுஈடுபாட்டுடன் தங்களின் ஒத்துழைப்புடன் நாம் கூடி இறையருளால் கிரஹப்பிரவேச நிகழ்ச்சியை வெற்றியடைய செய்வோம்

## புனிதப்படுத்துதல்

- பூஜை துவங்கும் நேரத்திற்கு 4மணி நேரம் முன்னதாக இடத்தை சுத்தம் செய்யவும்
- தலை வாசற்படிக்கு மாவிலை தோரணம் கட்டி. மஞ்சள் குங்குமம் இடவும்
- வாசல்படி மாலை சாற்றவும்
- வாசல், உட்புறம், பூஜையறையில் 8 இதழ் தாமரை கோலம் போடவும்
- பூஜை செய்யும் இடம் ஈரம் இல்லாமல் இருக்க வேண்டும்

***தேவையான பொருட்கள்:*** மாயிலை கொத்து, சணல் கயிறு, சுத்தியல், கம்பி ஆணி 4,சணல் கோணி 5, மிதியடி 2.
***மணிதவளம் :*** மேற்கண்ட பணிக்கு 1 ஆண் 1 பெண் தேவை

## கோ பூஜை

- பசுவும் கன்றும் கிடைக்காத நிலையில் வெள்ளியில் ஆன பசு கன்று அல்லது கோமாதா படத்துடன் பிரவேசிக்கவும்
- பசுவை வீட்டினுள் அழைத்து வருபவர் குளித்து, திருமண் / விபூதி இட்டு வேஷ்டி துண்டு கட்டியிருக்க வலியுறுத்தவும்
- பசுவும் கன்றும் பூஜைக்கு 2 மணி நேரம் முன்னதாக தேவை
- பசுவிற்கு புது வெள்ளை வேஷ்டி 4 முழம், கன்றுவிற்கு துண்டு
- கோதுமை தவிடு 2 கிலோ, அரிசி1/2 கிலோ, வெல்லம்1/2 கிலோ, வாழைப்பழம் 6

## பஞ்சகவ்யம்

- பசும் பால் 2 லிட்டர் (பால் காய்ச்ச உட்பட) ✱ பசும் தயிர் 100 மிலி
- பசுவின் கோமயம், சாணம், விரட்டி தரமாக கிடைப்பதில்லை எனவே தவிர்க்கவும். (கடையில் விற்கும் கோமியம் தவிர்க்கவும்)

## பூஜைப்பொருட்கள்

- பட்டியலில் உள்ள அனைத்து பொருட்களும் தேவை
- பட்டியலையும் வாங்கிய பொருட்களையும் ஒப்பிட்டு சரி பார்க்கவும்
- தேங்காய் அளவு கலசத்தின் வாய்க்கு ஏற்ப சிறியதாக இருக்கவேண்டும்
- பூஜைப்பொருட்களை 2 மணி நேரம் முன்னதாக பூஜை இடத்தில் சேர்ப்பிக்கவும்
- தாம்பாளம் 5, குடத்தில் நீர், டம்ப்ளர் 5, எவர்சில்வர் கப் 4,
- சாணம் அல்லது மஞ்சள் பூசிய செங்கல் 18, மணல் 1 பாண்டு

## பால் காய்ச்சுதல்

- புதிய அடுப்பை கழுவி மஞ்சள் குங்குமம் இடவும், மணல் நிரப்பி அதன் மேல் அடுப்பை வைக்கவும்
- 2 கிலோ விறகு சுள்ளி தேவை (சில சூழலில் எரிவாயு அடுப்பு, மின் காந்த அடுப்பும் பயன் படுத்தலாம்)
- பால் காய்ச்ச புதிய பால் பாத்திரம் அளவுடன் வாங்கவும்.
- முதன் முறையாக மட்டும் புதிய மண் அடுப்பு கொண்டு பால் காய்ச்சுதல் நன்று
- மஞ்சள் கயிற்றில் மஞ்சள்கொம்பு கட்டி பாத்திரத்தில் கட்டவும்
- பால் பொங்கியவுடன் அதில் சர்க்கரை, ஏலம், குங்குமப்பூ போட்டு படைக்கவும்
- மேற்கண்டவை தயார் செய்ய 20 நிமிடம் ஆகும், 1 பெண் போதும்
- ஹோம குண்டத்திலுருந்து நெருப்பு எடுக்க இடிக்கி தேவை
- பால் காய்ச்சியவுடன் அதே நெருப்பில் சர்க்கரை பொங்கல் செய்தல் நன்று.
- சர்க்கரை பொங்கல் செய்ய வெல்லம், புது அரிசி, முந்திரி, திராட்சை, பருப்பு

## புத்தகம்

புதுமனை புகுவிழா அன்று விநாயகர் அகவல், தேவாரம், திருவாசகம், திவ்யபிரபந்தம், சிவபுராணம்,திருப்புகழ், கந்தசஷ்டி கவசம், பகவத்கீதை, இராமாயணம், மகாபாரதம் போன்ற புத்தகங்களை நடுவீட்டில் வைத்து வழிபட்டு மாலையில் தீபம் ஏற்றியபின் படிக்கவும்

**மேற்படி புத்தகங்கள் இல்லை எனில் தவறாமல் புதியதாக வாங்கவும்.**

www.prohithar.com

## சைவ - வைணவ இலச்சினை

✱ தலைவாசலில் ஓம், சங்கு சக்கரம், சிவ வடிவம் பொருத்தவும்
✱ தலைவாசல் மேல் தனலக்ஷ்மி சின்னம் நன்று

## முக்கியமானவைகள்

✱ கத்தரிக்கோல், தேங்காய் உடைக்க கத்தி, ப்ளேடு, சமையல்கத்தி

## புது துணி - மாலை

✱ புது துணி மணையில் அமர்ந்தவுடன் வாழ்த்தி தரப்படும் உடுத்தியவுடன் மாலை சாற்றிய பின்னர் பிள்ளையார் பூஜை துவங்கும்

## தீபம் ஒளிர் விடல்

✱ கிரஹப்பிரவேச பூஜைகள் நிறைவு பெறும் வரை தீபம் மங்களகரமாக ஒளர்விட வேண்டும்
✱ இதற்கு ஒரு பெண் பொறுப்பு ஏற்க வேண்டும், தேவையான அளவு நல்லெண்ணெய், கரண்டி

## வரிசை தட்டுடன் பிரவேசம்

அருகில் உள்ள கோயில் வாசலில் இருந்து பூஜை துவங்கும் 2 மணி நேரம் முன்னதாக புறப்பட்டு புது வீட்டில் பிரவேசம் செய்யவும். வரிசை தட்டுகள் 9 (முன் நாள் இரவே தயார் படுத்தி வைக்கவும், தயார் செய்ய1 மணி நேரம் ஆகும்)

1. காமாட்சி விளக்கு[ பொட்டு பூ வைத்து ] காற்று அடித்தால் அணையாமல் இருக்க குடம்
2. புதிய விநாயகர், சரஸ்வதி, லக்ஷ்மி, படம்[பொட்டு பூ வைத்து]
3. சிறிய கப்பில் சர்கரை, புளி, பருப்பு 4 வகை, மிளகாய், உப்பு, அரிசி, தவிடு
4. வெற்றிலை, பாக்கு, மஞ்சள் கொம்பு, சுன்னாம்பு, பூச்சரம், வாழைப்பழம்
5. தம்பதி புதிய துணி, மாலை
6. மஞ்சள் பூசிய தேங்காய் 5
7. ஐந்து வித பழங்கள்(தலா 1)
8. மஞ்சள் தூள், குங்குமம், பன்னிர், கற்கண்டு, சந்தனம்
9. சிறிய குடத்தில் நீர்

குறிப்பு : வரிசை எடுக்க பெண்கள் போதுமான எண்ணிக்கை இல்லாத பொழுது வரிசை எண்1, 2,3, 4, 5 மட்டும் போதும்

## வரவேற்பு மற்றும் உபசரிப்பு

✱ விருந்தினரை வரவேற்க நன்கு அறிமுகமானவர் நன்று
✱ அன்பான வரவேற்புக்கு பெரியவர்கள் ஒருவரை வாசலில் நியமிக்கவும்
✱ பன்னீர் சொம்பு, சந்தனக்கிண்ணம், குங்கும சிமிழ், டைமண்ட்கற்கண்டு, ரோஜா பூ, மேஜை விரிப்பு, பூங்கொத்து
✱ வரவேறப்பு இடத்தில் விளையாட்டுத்தனமான சிறார்களை நியமிக்கவேண்டாம்
✱ வரவேற்ப்பு மிகவும் கௌரவமானது, மரியாதைக்குரியது
✱ நிகழ்ச்சி முடியும் வரையில் வருபவர்களை முகமலர்ச்சியுடன் வணக்கம் செலுத்தி வரவேற்கவும்
✱ விருந்தினர் விடைபெறும் பொழுது தாம்பூலம் பை தந்து நன்றிகூறி வாசல்வரை வழியனுப்பவும்
✱ கிரஹப்பிரவேச விருந்தோம்பலில் வரவேற்ப்பு மிகவும் முக்கியமானது

## அன்பளிப்பு

✱அன் பளிப்புகளை எழுத 40 பக்கம் கோடு போட்ட நோட்டு, பேனா, துணி பை, ரப்பர் பேன்ட் மற்றும் பொறுப்பாளர்

## இட தூய்மை / உடல் தூய்மை

✱ பூஜை செய்யும் இடத்தில் ஈரம், எண்ணெய் துடைக்க பழைய துணி, கோணி தேவை
✱ குப்பை போட குப்பை கூடை அல்லது பிளாஸ்டிக் பை
✱ புதிய மிதியடி, பழைய செய்தித்தாள்
✱ உணவு உண்ட பின் கை கழுவிட சரியான இடத்தை தேர்வு செய்யவும், துடைக்க டவல் அல்லது டிஷ்யு பேப்பர்
✱ வருகை தருபவர்கள் பயன்படுத்தும் வகையில் கழிவறையை தயார் படுத்தவும். போதுமான அளவு நீர், வாளி, ஜக்கு

கிரஹப்பிரவேசம் அன்று குப்பைகளை, எச்சில் இலைகளை வீட்டின் முன்பகுதியில் கொட்டாமல் பிளாஸ்டிக் பைகளில் போட்டு மூடிவைத்து முறைப்படி சுகாதார பணியாளர்கள் உதவியுடன் மறுநாள் அப்புறப்படுத்தவும், இதனால் இல்லத்தின் புனிதமும், அழகும் பாதுகாக்கப்படும்.

***குறிப்பு :*** *அனைத்து கழிவறைகளையும் மூடிவிட்டால் காலையில் வருகை தரும் நீரிழிவு நோயாளிகள், பெண்கள், முதியோர், குழந்தைகள் மிகவும் அவதிக்குள்ளாவார்கள், வாஸ்து என்கிற காரணம் காட்டி விருந்தாளிகளுக்கு சிரமம் தரவேண்டாம்*

www.prohithar.com

## அவசர கால தேவை

- ✱ மின் தடை ஏற்பட்டால் சமாளிக்க 2 பெட்ராமாஸ் விளக்கு அல்லது அவசரகால மின் விளக்கு (Emergency Light)
- ✱ டார்ச் லைட், எலக்டிரிக் டெஸ்டர், இன் ஸ்லேஷன் டேப், ஒரு துண்டு ஒயர்
- ✱ முதல் உதவி பெட்டி (பலர் கூடுவதால்)
- ✱ திடீர் என ஏற்படும் மின் தடை நீக்கும் வகையில் பூஜையின் பொழுது மின் பணியாளரை இருக்க சொல்லவும்

## புகை

பூஜையின் பொழுது எதிர்பாராத விதமாக புகை அதிகமானால் சிலரின் உடல்நிலை நலன் கருதி புகையை வெளியேற்ற மேஜை மின் விசிறி தேவை (Table Fan and Extension Wire Switch Box)

## சில்லரை காசுகள் (பூஜை துவங்கும் முன்னர் புரோகிதர் வசம் தரவும்)

- ✱ வெள்ளி காசு 5 கிராம் : 2 எண்ணிக்கை (வாஸ்து சாந்தி தானம்)
- ✱ 1 ரூபாய் காசு : 48 + 108 (லட்சுமி பூஜை மற்றும் அர்ச்சனை)
- ✱ 5 ரூபாய் காசு : 9 (நவக்கிரக பூஜை)
- ✱ 50 காசு : 9 (திருஷ்டி பூசனி)

## முறைமைகள் - சம்பிரதாயம்

கிரஹப்பிரவேசத்திற்கான முறைகள் மட்டும் கடைப்பிடிக்கப்படும், தங்களின் குடும்பத்தில் சம்பிரதாயங்கள் கூடுகலாகவோ அல்லது நீக்கம் இருப்பின் முன் னதாக புரோகிதர் வசம் தெரியப்படுத்தவும்

## புரோகிதர் விபரம்

- ✱ குறிப்பிட்ட நேரத்தில் புரோகிதர் வருகை தருவார்
- ✱ முன் னாள் இரவு தங்கும் சூழலில் புரோகிதர் உணவு : எண்ணெய் இல்லாத சப்பாத்தி அல்லது இட்லி
- ✱ உதவி : புரோகிதருக்கு பொருட்களை எடுத்து தர நெருக்கமான உறவினர் ஒருவரை அருகில் இருக்க சொல்லவும்

## நல்ல நேரம்

- ✱ கிரஹப்பிரவேஸம் நேரம் (லக்னம்) எல்லா நட்களிலும் அதிகாலையில் வராது. சிலநாட்களில் பகல் பொழுதிலும் வரும்
- ✱ அதிகாலை பிரம்ம முகூர்த்தம் என் பது அனைத்து நாட்களிலும் சுபநாளாகவும் கிரஹப்பிரவேஸத்திற்கு உகந்தும் இருக்காது.
- ✱ கரிநாள் என் பது சூரிய உதயதிற்கு பின் னர் சூரிய மறைவு வரை மட்டும் கணக்காகும்.
- ✱ குறித்த நல்ல நேரத்தில் பூஜையை துவக்கி நிறைவு செய்ய நன் கு திட்டமிடவும்
- ✱ நல்ல லக்னத்தில் பால் பொங்குதல் முக்கியம்

## திருஷ்டி பரிகாரம்

- ✱ திருஷ்டி பரிகாரம் சுற்றி உடைக்க கட்டிடம் கட்டிய தொழிலாளி குளித்து திருநீறு பூசியவர் தேவை
- ✱ பாதசாரி, வாகன ஓட்டிகளின் பாதுகாப்பு முன் னிட்டு பூசணியை நடுசாலையில் உடைக்ககூடாது என் று வலியுறுத்தவும்

## கவனம் செலுத்துதல்

- ✱ பூஜை துவங்கியவுடன் முழு ஈடுபாடுடன் பூஜை செய்ய ஏதுவாக நன் கு திட்டமிடவும்
- ✱ வருகை தரும் விருந்தினரை உபசரிக்க வரவேற்க நன் கு அறிமுகமானவரை நியமிக்கவும்

## பாதபூஜை

- ✱ தாய், தகப்பனார் இருவரும் பாதபஜை செய்து பின் னர் பூஜை துவக்குவது நன் று
- ✱ தங்களின் கோத்திரம், குல தெய்வம் அறியவும். குடும்பத்தினர் நட்சத்திரம், இராசி அறியவும்

## தண்ணீர்

- ✱ மின் தடையை முன் னிட்டு முன் னாள் இரவே போதுமான அளவு நீரை சேமிக்கவும்

## மங்கள இசை

- ✱ நாதஸ்வர மேளம் ஏற்பாடு அல்லது மங்கள இசை, தேவாரம், பக்திப்பாடல்கள் ஒலிவட்டு தேவை

## மனிதவளம்

- ✱ 2 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் இடை விடாது ஈடுபாடுடன் செயல்பட்டால் போதும் நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திடலாம்

www.prohithar.com

## தர்மம்

கிரஹப்பிரவேசம் அன்றைய தினம் ஆதரவற்றோர், ஊனமுற்றோர், முதியோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கு ஒரு வேளை உணவிற்கு ஏற்பாடு செய்யலாம், நல்ல நிலையில் மீதம் உள்ள உணவுகளை குறித்த நேரத்தில் மேற்படி இல்லங்களுக்கு தரலாம்

**ஆதரவற்றோர் இல்ல தொலைபேசி எண்கள்**

| | |
|---|---|
| ஆதீஸ்வரர் இல்லம் ஆதரவற்றோர் இல்லம் | : 94444 85491 |
| குட்லைப்சென்டர் (மன வளர்ச்சி குன்றியோர்) | : 2226 4151, 2226 4152 |
| அக்ஷயா ஆதரவற்ற முதியோர் இல்லம் | : 2276 1658, 98410 08325 |
| சரணாலயம் ஆதரவற்ற முதியோர் இல்லம் | : 94444 94657, 94448 08915 |
| பவுஷ்ய தீபம் ஆதரவற்ற மனவளர்ச்சி குன்றியோர் இல்லம் | : 2276 1889, 94440 00889 |
| உதவும் உள்ளங்கள் (ஆதரவற்ற குழந்தைகள்) | : 2226 0612, 6544 6378 |
| ஸ்ரீ சாரதா சக்தி பீடம் ஆதரவற்ற சிறார் இல்லம், பள்ளி | : 2276 0612, 2233 3214 |
| சிவாகம வேதபாட சாலை | : 65129744, 94443 12367 |
| அஹோபில மடம் வைணவ வேத பாட சாலை | : 2239 7567, 94440 47567 |
| காயத்ரி ஞானவாபி (ஆதரவற்றோர் இறுதி சடங்கு) | : 22212984, 2238 3333 |

## ஷாமியானா பந்தல் / மின்அலங்காரம், மின் விளக்கு

- ✱ வாசலில் வாழை மரம், முகப்பு பந்தல், தோரணம்
- ✱ அமர்வதற்கு ஜமகாளம் , சேர், மேஜை, ஷாமியானா பந்தல்,
- ✱ மின் அலங்காரம், மின் விளக்கு (குழந்தைகள் கைதொடாத வகையில், மின் அதிர்ச்சி ஏற்படாவண்ணம் பாதுகாப்புடன் )

## துணிகள் (துணிகளை துணிக்கடையில் மட்டும் வாங்கவும்)

- ✱ பூஜையின் பொழுது "பாதுகாப்பை முன்னிட்டு" பாலியஸ்டர், நைலான் துணிகளை உடுத்த வேண்டாம்.
- ✱ பாரம்பரிய, கலாசார ஆடை உடுத்தவும்
- ✱ பூஜையில் பயன் படுத்தும் துணிகள் பருத்தியில் மட்டும் வாங்கவும், பாலியஸ்டர் கட்டாயம் தவிர்க்கவும்

"கைத்தறி கதர் துணி வாங்கி ஏழை நெசவாளியின் ஒரு நாள் உணவிற்கு வழி செய்வோம்" - மகாத்மா காந்தி

## போக்குவரத்து

பொருட்களை கொண்டு செல்ல, வருகை தருபவர்களை அழைத்துவர, அனுப்பி வைக்க தேவைப்படின் வசதிக்கேற்ப கார், வேன் ஏற்பாடு செய்யலாம்

## புரிந்துணர்வு

செய்யக்கூடிய பூஜையின் பொருள் அறிய தமிழ் வழி விளக்கம் தரப்படும் இதறகு கூடுதலாக 2 மணி நேரம் ஆகும். 1 மாதம் முன்னர் புரோகிதர் வசம் ஒப்புதல் பெறவும்

## சேவை தரம்

- ✱ மிக அதிக தரத்துடன் நிகழ்ச்சியினை படைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்
- ✱ புரோகிதரின் சேவையில் குறைகள் இருப்பின் அவசியம் தெரிவிக்கவும் இது மேன்மையடைய, செம்மைபடுத்த உதவும்
- ✱ அனைத்து விதமான விமர்சனங்களும் வரவேற்கப்படுகிறது

## புகைப்படம்

✱ பசுமையான நினைவுகள் நல்ல முறையில் பதிவு செய்ய தொழில்முறை புகைப்படக்கலைஞரை ஏற்பாடு செய்யவும்

வீட்டில் உள்ளவர்களே படம் எடுப்பது முழுமையாகவும், தரமாகவும் அமைவதில்லை இதனால் நிகழ்ச்சியில் கவனம் செலுத்துவது மற்றும் வருகைதந்த விருந்தினர்களை உபசரிக்க இயலாது

## எச்சரிக்கை

முடிவடையாத பாதுகாப்பற்ற ஆபத்தான கட்டுமான பகுதிகளுக்கு குழந்தைகள், வருகை தருபவர்கள் நுழையாமல் இருக்க தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யவும், எச்சரிக்கை பட்டையை கட்டவும், முதலுதவி பெட்டி தேவை.

தரையில் உள்ள தண்ணீர் தொட்டி, கழவுநீர் தொட்டிகளை பாதுகாப்பாக மூடவும்

முதலுதவி, பூஜை கால பாதுகாப்பு முன்னேற்பாடு, அவசரகால கையேடுகள் எனது இணைய தளத்தில் தமிழில் தரப்பட்டுள்ளது, தரவிறக்கம் செய்து பலன் பெறவும்.

www.prohithar.com

## குறிப்புகள்

- ✱ பசு-கன்று முந்திய நாள் இரவே வரவழைத்து கட்டி வைத்தல் நன்று
- ✱ வீடியோகாரர், புகைப்பட கலைஞர் வசம் கோபூஜை நேரத்தை குறிப்பிடவும்
- ✱ துணியை துணிக்கடையிலும், அரிசியை அரிசிகடையில் மட்டும் வாங்கவும் அப்பொழுதுதான் தரமாக இருக்கும்
- ✱ புத்துணர்ச்சிக்காக அதிகாலையில் காபி அல்லது டீ ஏற்பாடு
- ✱ கடைசி நேரத்தில் கிடைக்காத பொருட்களுக்காக அலைச்சல் படாமல் இருப்பதை கொண்டு மனநிறைவுடன் செய்வோம்
- ✱ பழங்கள் கெட்டுப்போகாமல் இருக்க பிளாஷ்டிக் பையில் வைக்கவேண்டாம். திறந்த நிலை அல்லது குளிர் பதனியில் வைக்கவும்

## பெயர் - நட்சத்திரம்

தங்களின் குடும்பத்தினர் அனைவரது பெயர், நட்சத்திரம், ராசி, கோத்திரம் ஆகியவற்றை வயது மூப்பு அடிப்படையில் வரிசைப்படுத்தி எழுதி பூஜை துவங்கும் முன்னர் புரோகிதர் வசம் தரவும்

## ஹோம குண்டம் கலைத்தல்

பூஜை மறுநாள் அல்லது மூன்றாம் நாள் காலையில் சூரிய உதயத்திற்கு முன்னர் குளித்து சாமிபடத்திற்கு தீபாராதனை செய்து பின்னர் வடகிழக்கில் (ஈசான்ய மூலை) உள்ள செங்கலை கலைத்து பின் மற்ற செங்கல்களையும் அப்புறப்படுத்தவும்

சாம்பலை தனியாக எடுக்கவும், பழையதுணியை இரண்டாக மடித்து அதில் சாம்பலை கொட்டி மூட்டைக்கட்டி அதை ஒரு தட்டில் தட்டவும், தட்டில் விழும் நுண்ணிய சாம்பலை விபூதியாக பயண்படுத்தவும், மீதம் உள்ள சாம்பலை பூச்செடி அல்லது மரத்தின் அடியில் கொட்டவும்.

ஹோமத்தில் இட்ட சில்லரை காசுகளை பண அலமாரி , பூஜை அறையில் வைக்கவும்

## திருக்கோயில் வழிபாடு

கிரஹப்பிரவேசம் அன்று தலைவாசலில் இருபுறமும் விளக்கு ஏற்றவும், அருகில் உள்ள சிவன் அல்லது பெருமாள் கோயிலுக்கு சென்று குடும்பத்தினர் பெயரில் அர்ச்சனை செய்து வழிபடவும். வீடு திரும்பிய உடன் குடும்ப அங்கத்தினர் கூட்டாக அமரந்து பக்தி புத்தகத்தை படிக்கவும்

தங்கள் பூர்வீக கிராமத்தில் உள்ள வசதியற்ற கோயிலுக்கு எண்ணெய் /ஒருமாத மின் கட்டணம் தந்து உதவிடுங்கள். ஆகமவிதிப்படி குளத்துடன் கூடிய பழமையான கோயிலுக்கே முன்னுரிமை தரவும்

## வேண்டுகோள்

கிரஹப்பிரவேசம் தொடர்பான தங்களின் ஐயங்களுக்கு முழு விளக்கம் தேவைப்படின் மதியம் 1 மணிக்கு மேல் தொலைபேசியில் அழைக்கவும், காலை வேளைகளில் பூஜையில் இருக்கும் பொழுது தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் அளிக்க முடியாத சூழல் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் . மேலும் பூஜை நேரங்களின் எனது கைத்தொலைபேசி இயக்கம் நிறுத்தப்பட்டிருக்கும்

---

### பழைய வீட்டிலிருந்து புதுவீட்டிற்கு கொண்டு வரவேண்டியவை

(புறப்படும் முன் சரிபார்க்கவும்)

பித்தளை கலச சொம்பு
குத்து விளக்கு 2
காமாட்சி விளக்கு
எண்ணெய் புட்டி

பன்னீர் சொம்பு
சந்தன கிண்ணம்
குங்கும சிமிழ்

தட்டு, மணி, தீபக்கலசம்
பஞ்சபாத்திரம், உத்திரனி
தாம்பாள தட்டு 5 + 11 வரிசை
சிறிய கப் 11

மர மணை 3
மணை மேல் துணி
பழைய செய்தித்தாள்
குப்பை போட பிளாஷ்டிக் பை

பழைய துணி, கோணி
கத்திரிக்கோல்
ப்ளேடு, சமையல் கத்தி
தேங்காய் உடைக்க கத்தி
பக்கெட் 1, ஜக்கு 2
கோலமாவு, வண்ணக்கோலம்

**மாவிலை கொத்து, தோரணம்**
ஆணி3 , சுத்தியல்
பசும்பால், தயிர், கோமியம்
சாணம், விரட்டி
பால் 1 லிட்டர், பால் பாத்திரம்
சர்க்கரைபொங்கல் பொருள்
கரண்டி 2, புதிய அடுப்பு
விறகு சுள்ளி 5 கிலோ
நெருப்பு எடுக்க இடிக்கி
மின் அடுப்பு, காந்த அடுப்பு,
எரிவாயு அடுப்பு

எமர்ஜென்சி லைட் 2, டார்ச்லைட்
மங்கள இசை- தேவார பாடல்
டேபிள் ஃபேன் , கைவிசிறி
அன்பளிப்பு தாம்பூல பை

***கைபேசி சார்ஜர்***
செங்கல் 9 - மணல் 1 பாண்டு
குடிநீர், டம்பளார்
ஜமக்காளம், பாய்

சில்லரை காசுகள்
பூஜை பட்டியல் பொருட்கள்
கேமிரா
டர்கி டவல் பெரியது 2

**பக்தி புத்தகங்கள்**
விநாயகர் - சரஸ்வதி -லக்ஷ்மி படம்

www.prohithar.com

## நிகழ்ச்சி நிரல்

தேதி : நாள்: நேரம்:

கோ பூஜை
கணபதி ஹோமம்
கணபதி 108ஆவர்த்தி
வாஸ்து 11 ஆவர்த்தி
பஞ்சலோகபாலகர், அஷ்டதிக் பாலகர் ஹோமம்
லட்சுமி குபேர ஹோமம் 8ஆவர்த்தி
நவக்கிரக ஹோமம்
ஜென் ம நட்சத்திர சாந்தி ஹோமம்
சர்வ காயத்ரி ஹோமம் 11
குல தெய்வ தியான மந்திரம், காயத்ரி ஹோமம் 5

**சிலநாட்களில் கிரஹப்பிரவேஸ செய்ய உகந்த (லக்ன) நேரம் சூரிய உதயத்திற்கு பின் னர் பகலிலும் ஏற்படும். எல்லாநாட்களிலும் அதிகாலையில் கிரஹப்பிரவேஸ லக்னம் இராது என் பதை கவனிக்கவும்.**

குறிப்பு: சரியான இலக்னத்தில் பால் காய்ச்ச வேண்டும் என் பதால் நேரம் இல்லாத நிலையில் ஆவர்த்திகள் எண்ணிக்கை குறையும், இது அப்பொழுதைய சூழல் பொருத்ததாகும். எனவே நிகழ்ச்சிகள் குறித்த நேரத்தில் துவக்குவது மிகவும் முக்கியமானது.

இடத்தூய்மை, கோலம் இடல், தோரணம்-மாலை சாற்றல்

✱ கோபூஜை ஏற்பாடு ✱ கோவிலுக்கு சென் று வருதல்

✱ வரிசை தட்டு ஏற்பாடு ✱ மிக முக்கிய உறவினர் வருகை

ஆகியவையே நேரம் தாமதத்திற்கு மிக முக்கிய காரணங்களாக விளங்குகிறது என் பது எனது முந்திய அனுபவங்களில் கிடைத்த விடையாகும் என் பதை இங்கு குறிப்பிடுகிறேன்

முன் னாள் இரவில் பொம்மை எரித்தவுடன் வீட்டை கழுவி தூய்மைப்படுத்துவது கட்டிட தொழிலாளியின் பணியாகும். ஒருசிலர் சரிவர சுத்தம் செய்யாமல் உறங்கி விடுகிறார்கள். இதுவும் நிகழ்ச்சி தாமதத்திற்கு முக்கியமான காரணம் ஆகும் என் பதை கவனத்தில் கொள்ளவும்

---

### பால் பொங்குதல் - ஓர் விளக்கம்

(இதில் தங்கள் விருப்பப்படி எந்த முறையையும் பயன் படுத்தலாம்)

முறை 1: கணபதி ஹோமத்தின் நிறைவில் அக்னி எடுத்து புதிய அடுப்பில் பால் காய்ச்சுதல், அடுத்து சர்கரை பொங்கல் செய்து சூரியனுக்கு படைத்தல். இந்த முறையில் ஹோமத்தில் அவல், அருகம் புல், கொப்பரை, தேங்காய்ஓடு, ஓம திரவியங்கள் மட்டும் அர்பணிக்கப்படும்.

முறை 2: பிரவேசம் செய்தவுடன் சாமி படங்களக்கு தீபாராதனை செய்தவுடன் அந்த கற்பூர தீபத்தை வைத்து புது அடுப்பு மூட்டி பால் காய்ச்சி உடன் சர்க்கரை பொங்கல், சுண்டல் செய்து அதை கணபதி ஹோமத்தில் அர்பணித்தல்

வேறு வீட்டில் இருந்து சமைத்து கொண்டு வரப்படும் சுண்டல், பொங்கல், கொழுகட்டை மற்றும் நெய்வேத்தியங்கள் ஆகியன கிரஹப்பிரவேச பூஜையில் & ஹோமத்தில் சாஸ்திரப்படி அர்பணிக்ககூடாது.

மேற்படி “முறை 2” படி கிரஹப்பிரவேச இல்லத்தில் குடும்ப அங்கத்தினரால் சமைக்கப்படும் நெய்வேத்தியங்கள் மட்டும் பூஜையில் அர்பணிக்கப்படும்.

---

## பட்டியலில் உள்ளபடி பொருட்களை வாங்குவது தங்களை சார்ந்தது
## பொருட்களை வாங்கித்தரும் ஏற்பாடு எங்களிடம் இல்லை

---

### மாற்று தொலைபேசி எண்கள்:

சில இடங்களில் கைபேசி இணைப்பு சரிவர கிடைக்காது எனவே அதிகாலையில் புரோகிதர் தங்களை எளிதாக தடையின் றி தொடர்பு கொள்ள கூடுதல் தொலைபேசி எண்களை தந்து உதவவும்.

---

|| தரமான சேவையே குறிக்கோள் ||

பாலு சரவண சர்மா, பழைய தாம்பரம் பரம்பரை புரோகிதர் - ஜோதிடர் - தணிகை பஞ்சாங்க கணிதக்ஞர்

www.prohithar.com

**பாலு. சரவணசர்மா**
புரோகிதர்–ஜோதிடர்
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர்,
தாம்பரம் மேற்கு, சென்னை 600 045

ௐ

தொலைபேசி / நகலி : 2226 1742
கைத்தொலைபேசி : 98403 69677
மின்அஞ்சல் முகவரி: prohithar@gmail.com
இணைய தளம்: www.prohithar.com

# கிரஹப்பிரவேசம் பொருள் பட்டியல்

## பூஜைப்பொருட்கள்

தரமான மஞ்சள் தூள் 100gm
தரமான குங்குமம் 25gm
மஞ்சள்கொம்பு 50gm
குண்டு மஞ்சள் 50gm
விபூதி சிறிய Pkt 1
நாம சூர்ணம்
பன்னீர் புட்டி 50 ml
சந்தனம் 10gm
நவதான்யம் கலப்பு 100gm
நவதான்யம் தலா 25gm
கற்பூரம் 25gm
ஊதுபத்தி 1Pkt
தரமான சாம்பிராணி 20gm
நெல் பொரி 1Pkt
ஓமத்திரவியம் Spl
உமி பாக்கெட் 1
மெழுகுவத்தி 2
திரிநூல் 1 கட்டு
தேன் புட்டி 20gm
நூல்கண்டு 3
பூநூல் 2
வெற்றிலை 50
பாக்கு 50gm
சுண்ணாம்பு சிறியது
தீப்பெட்டி 2
தர்பை புல்
வெல்லம் 100gm
டைமன்ட் கற்கண்டு 100gm
பேரிச்சம் பழம் 200gm
கொட்டைபாக்கு 9
பாக்கு தொன்னை 2டஜன்
ப்ளேடு 1
அவல், பொரி, கடலை 100gm
நாட்டு சர்க்கரை 100gm
கொப்பரை 1
முந்திரி 50gm
திராட்சை 50gm
ஏலம் தூள் 10gm
பச்சை கற்பூரம் 5 gm
தீர்த்த செட்
படிகாரம், கம்பளி கயிறு
கருங்காலி கட்டை
தரமான நெய் 250gm
அரசன் சுள்ளி 4 கட்டு
நவசமித்து 1 கட்டு
கோலமாவு, சாக்பீஸ், 5 கலர் பொடி
**ஓம், ௐ, கெஜலக்ஷ்மி** ஸ்டிக்கர்
சிறிய கத்திரிக்கோல் 1

## பஞ்சகவ்யம்

பசும் பால் 1லிட்டர்
பசும் தயிர் 50 மிலி

## இதரப்பொருட்கள்

நல்லெண்ணெய் 1Kg
வாழை இலை 9
வாழை பழம் 24
கல்யாண பூசனி 1
எலுமிச்சை பழம் 12
பழங்கள் (தலா 2) 5 வகை
மட்டை தேங்காய் 2
உரித்த மிக சிறிய தேங்காய் 13
பச்சரிசி 5 Kg
புழுங்கல் அரிசி 1 Kg

கோதுமை தவிடு 3 Kg
வெல்லம் ½ Kg

## பூ வகையறா

பூ மாலை 2
வாசல் மாலை 1
பூச்சரம் 20 முழம்
உதிரிப்பூக்கள்,அருகன் புல்,
துளசி, வில்வம், தாமரை 4
**மா இலை கொத்து (கழுவியது)**

## துணி வகையறா (துணி கடை)

பிள்ளையார் துண்டு சிறியது 2
பெரிய காசி துண்டு 2

நவக்கிரக துணி 9 (பருத்தி)

பட்டுதுணி 1அடி X 1அடி அளவு 1
அய்யர் கதர் வேஷ்டி/ சட்டை துணி
4 முழம் வேஷ்டி துண்டு (பசு) 1

பெரிய பித்தளை சொம்பு 2
சிறிய பித்தளை செம்பு 9

**கடைக்கு செல்லும் பொழுது துணிப்பை கொண்டு செல்லவும்**




## வீட்டிலிருந்து

குத்து விளக்கு 2 காமாட்சி விளக்கு
மண் அகல் 4பன்னீர் சொம்பு
சந்தனகிண்ணம், குங்கும சிமிழ்
வரவேற்பு மேஜை விரிப்பு
தட்டு, மணி, தீபக்கலசம்
பஞ்சபாத்திரம் உத்திரனி
தாம்பாள தட்டு 15, சிறிய கப் 5
மர மணை 3, மணை மேல் துணி
எண்ணெய் புட்டி + கரண்டி
நெருப்பு எடுக்க இடுக்கி

பழைய செய்தி தாள்
கைதுடைக்க பழைய துணி
கோணி 4

கத்திரிக்கோல், சமையல் கத்தி
தேங்காய் உடைக்க கத்தி
பக்கெட் 2, ஜக்கு 4, குடம் 2

பால் பாத்திரம், கரண்டி 2
புதிய மண்அடுப்பு
விறகு சுள்ளி 5 கிலோ

செங்கல் 21 – மணல் 1 பாண்டு
சர்கரை பொங்கல் பொருள்
எமர்ஜென்சி லைட் 2
டார்ச்லைட்
மங்கள இசை, தேவாரம், திருப்புகழ் ஒலிவட்டு
குடி நீர், டம்பளார் 12
ஆணி 4 , சுத்தியல்

**விநாயகர் சரஸ்வதி லக்ஷ்மி படம்**
**பக்தி புத்தகங்கள்**

5 கிராம் வெள்ளி காசு 2
ஐந்து ருபாய் காசு 9
ஒரு ருபாய் காசு 48 + 108
50 காசு 9

பருப்பு, உப்பு, மிளகாய், புளி,
சர்க்கரை, தவிடு



அதிகமான புகையை வெளியேற்ற
Table Fan & Extension Wire Box
தவறாமல் கொண்டுவரவும்

www.prohithar.com